# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**ஆணை நாள். 06.10.2026**

**முன்னிலை**

திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் : CP-880/A/2024**

| | | |
|---|---|---|
| திரு. கோ.பார்த்தசாரதி | .. | மனுதாரர் |

/எதிர்/

| | | |
|---|---|---|
| பொதுத் தகவல் அலுவலர்/<br>வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,<br>வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,<br>மேட்டூர்,<br>சேலம் மாவட்டம் – 636 401.. | .. | பொது அதிகார அமைப்பு |

**ஆணை**

மேற்குறிப்பிட்ட வழக்கு 01.10.2026 அன்று ஆணையத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. கோ.பார்த்தசாரதி அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)–ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு எஸ். செல்லத்துரை, பொதுத் தகவல் அலுவலர் / வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், மேட்டூர், சேலம் மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 07.01.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)–ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், மனுதாரர் ஆகிய தான் 18.07.2022 நாளிட்டு மேட்டூர் சார் ஆட்சியருக்கு அனுப்பிய புகார் மனு மனுக்கள் பதிவேட்டில் பதிவுசெய்த பதிவேட்டின் பக்க ஒளிநகல் மற்றும் காடையாம்பட்டி வருவாய் அலுவலர்களிடம் புகாருக்காக தாங்கள் விளக்கம் கேட்டு அனுப்பிய கடித நகலையும் & வருவாய்துறை அலுவலர்கள் தங்களுக்கு அனுப்பிய தன்னிலை விளக்க அறிக்கையின் நகல், தினசரி முன்னேற்ற அறிக்கை நகல், அப்புகார் மனு

மீது எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் என்பது போன்ற தகவல்களை வழங்கக் கோரி 10 இனங்களில் விண்ணப்பித்துள்ளார்

3. பொது தகவல் அலுவலர் பதில் வழங்காத காரணத்தினால் மனுதாரர் 12.02.2024 நாளிட்ட பிரிவு 18(1)–ன் கீழ் புகார் மனுவை தாக்கல் செய்துள்ளார். அந்த புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 06.10.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை ஏற்கனவே 29.09.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார். மேலும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க அனைத்து இனங்களுக்கான முழுமையான மற்றும் சரியான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் முழுமையான தகவல்கள் இல்லை எனத் தெரிய வருகிறது. எனவே, ஆணையம் பொதுத் தகவல் அலுவலருக்கு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-

- ***மனுதாரர் 6(1) மனுவில் கோரிய அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை உரிய ஆவண நகல்களுடன் <u>"தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005–இன்படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)–ன்படி கட்டணமின்றி மனுதாருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 03.11.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலர்களுக்கு இவ்வாணையத்தால் உத்தரவிடப்படுகின்றது.***

ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)
மாநில தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

<u>**வழக்கு எண் CP-880/A/2024**</u>

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
மேட்டூர், சேலம் மாவட்டம் – 636 401.

**<u>வழக்கு எண் CP-880/A/2024</u>**

**<u>மனுதாரர்:</u>**
**திரு. கோ.பார்த்தசாரதி**
**மங்கானூர்,**
**கஞ்சநாயக்கன்பட்டி அஞ்சல்,**
**காடையாம்பட்டி வட்டம்,**
**சேலம் – 636305.**

Copy to File
Je/PA 06.10.2026